**கவனிக்க.-** *2017.12.08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2050 - 2017 දෙසැම්බර් මස 15 වැනි සිකුරාදා - 2017.12.15

*2050 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2308 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2314 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, சனவரி மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2305 - B81234 - 5,403 (2017/12)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து* ***சிங்கள மொழி*** *: மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து* ***தமிழ் மொழி*** *: மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப,* ***சிங்கள மொழி*** *:யில் அல்லது* ***தமிழ் மொழி*** *:யில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3* ***சிங்கள மொழி*** *: மூலத்தில் அல்லது* ***தமிழ் மொழி*** *: மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சு

*அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் ஆரம்ப தொழில்நுட்ப சேவைகள் தரத்தின் தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புசெய்தல் - 2017*

இத்திணைக்களத்தின் ஆரம்ப தொழில்நுட்ப சேவைகள் தரத்தின் (PL3-2016) தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக தகைமைகள் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பின்வரும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம், மாஹேனவத்த, பிட்டபன, ஹோமாகம" எனும் முகவரிக்கு கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் "அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் ஆரம்ப தொழில்நுட்ப சேவைகள் தரத்தின் தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2017" எனத் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும். பரீட்சையின் பெயர் சிங்கள மொழிமூல விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழிமூல விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிநாள் 2018.01.15 ஆந் திகதி ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவமொன்று அல்லது அது தொடர்பான கடிதமொன்று தபாலில் காணாமல் போனதாக அல்லது காலதாமதம் அடைந்துள்ளதாக செய்யப்படும் முறையீடுகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாது. இறுதி நாள் வரை விண்ணப்பப்படிவங்களை காலதாமதம் செய்வதால் ஏற்படக்கூடிய இழப்புகளை விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

1. **ஆட்சேர்ப்புமுறை**.- தொழில்சார் பரீட்சை மற்றும் கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் நிறுவனமொன்று அல்லது பரீட்சை சபையினால் நடத்தப்படும் தொழில்சார் பரீட்சைக்கு 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் தேர்ச்சிப் புள்ளிகளின் ஒழுங்கின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ள எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கு எண்ணிக்கையானவர்கள் கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் நிறுவனம் அல்லது பரீட்சை சபையின் ஊடாக அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள புள்ளி வழங்கும் நடபடிமுறைக்கு அமைய கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும். தொழில்சார் பரீட்சைக்கான புள்ளிகள் மற்றும் கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் ஆகியவற்றை சேர்த்து தேர்ச்சிப் புள்ளிகளின் ஒழுங்கின் அடிப்படையில் தகைமைகளைப் பெற்றுக்கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளரால் சம்பந்தப்பட்ட பதவிகளுக்கு நியமிக்கப்படுவார்கள்.

2. **சேவை நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். விதவைகள், அநாதைகள்/ விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்பு நிதி செலுத்த வேண்டும்.

(ii) இப்பதவி மூன்றுவருட தகுதிகாண் காலத்தைக்கொண்டிருக்கும்.

(iii) III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 வருடங்களுக்குள் முதலாம் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iv) அரச கரும மொழிக் கொள்கைகளுக்கு அமைய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 07/ 2007 இற்கு இணங்க குறித்த காலப்பகுதிக்குள் அரச கரும மொழியில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

(v) அரச சேவைகள் ஆணைக்குழுவின் நடபடிமுறை ஒழுங்குவிதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரச நிதிப்பிரமாணக் குறிப்பு மற்றும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்படும்.

*3. **சம்பள அளவுத் திட்டம்**.-* பொது நிருவாக சுற்றுநிருபம் 3/ 2016 கீழ் PL3-2016 ரூபா 25,790 - 10 x 270 - 10 x 300 - 10 x 330 - 12 x 350 - ரூபா 38,990 ஆகும். குறித்த சம்பளம் 2020.01.01 ஆந் திகதி முதல் உரித்தாகும். இச்சுற்றுநிருபத்தின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கு அமைய நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து சம்பளம் செலுத்தப்படும். அதற்கு மேலதிகமாக அரச உத்தியோகத்தர்களுக்கு காலத்துக்குக்காலம் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

4. **பதவியின் பொறுப்புகள்**.- பிரதான மின் தொகுதியின் பராமரிப்பு அலுவல்கள், சீர்த்திருத்த அலுவல்களுக்கு உதவி செய்தல், மின் இணைப்பின் தவறுகளை கண்டுபிடிப்பதற்கு உதவி செய்தல், இலத்திரனியல் உபகரணங்களின் சிறு சீர்த்திருத்த அலுவல்கள், தேவையான சந்தர்ப்பங்களில் ஆய்வுகூட அலுவல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல் மற்றும் நிறுவனத் தலைவரால் பணிக்கப்படும் பதவியுடன் தொடர்புடைய வேறு பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கல்.

5. **தகைமைகள்** :

5.1 *கல்வித்தகைமைகள்.-* க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமை சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல்.

5.2 *தொழிற் தகைமைகள்.-* மேற்குறிப்பிடப்பட்ட 4 இல் குறிப்பிடப்பட்டவாறாக பதவியின் பொறுப்புகளுடன் தொடர்புடைய மூன்றாம் நிலைக் கல்வி, வாழ்க்கைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் கைத்தொழில்/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள தேசிய தொழிற்கல்வித் தகைமை (NVQ) நான்காம் (04) மட்டத்திற்கு குறையாத மட்டத்தின் தகைமைகள் சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொண்டிருத்தல்.

5.3 *அனுபவம்.-* சம்பந்தப்பட்ட துறையில் 03 வருடங்களுக்குக் குறைவிலாத செயற்பாட்டு ரீதியிலான அனுபவம்.

5.4 *உடல் ரீதியிலான தகைமைகள்.-* ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணி புரிவதற்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் கூடியவாறு உடல் மற்றும் உள ரீதியில் ஏற்புடையவராக இருத்தல் வேண்டும்.

5.5 *வயது.-* வயதெல்லை 18 இற்கும் 45 இற்கும் இடைப்பட்டதாக இருக்க வேண்டும். அரச சேவையைச் சேர்ந்தவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது. (அதன்படி விண்ணப்பதாரிகளின் பிறந்த நாள் 2018.01.15 அல்லது அதற்கு முன்னதாகவும் 1973.01.15 அல்லது அதற்கு பின்னருமான வயதெல்லையைக் கொண்டிருத்தல் வேண்டும்.)

5.6 *வேறு தகைமைகள்* :

(i) விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருக்க வேண்டும்.
(ii) விண்ணப்பதாரி நல்லொழுக்கம் உடையவராக இருக்க வேண்டும்.
(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளின்போது ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள் யாவற்றையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

6. **பாட விதானம்** :

6.1 *தொழில் முறை பரீட்சை.-* அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் ஆரம்ப தொழில்நுட்ப சேவைகள் தரத்தின் (PL-03-2016) தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான தொழில்சார் பரீட்சை பின்வரும் பாட விதானத்தைக் கொண்டதாகும் :

| *வினாத்தாள்* | *பாடவிதானம்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்குத் தேவையான புள்ளிகளின் எண்ணிக்கை* |
|---|---|---|---|---|
| செயன்முறை பரீட்சை | தேசிய தொழிற்தகைமைகள் (NVQ) நான்காம் (04) மட்டத்துக்கு அமைய சோதனை நடாத்தப்படும். | 01 மணித்தியாலம் | 100 | 40% |

6.2 ***கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை.***- கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை - 100 புள்ளிகள் செயன்முறை ரீதியான பரீட்சைக்கான வினாப்பத்திரத்துக்கு 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் தேர்ச்சிப் புள்ளிகளின் ஒழுங்கின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ள எண்ணிக்கையில் இரு மடங்கு எண்ணிக்கையானவர்கள் கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களப் பணிப்பாளரால் தீர்மானிக்கப்படும். அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும் :

| புள்ளிகள் வழங்கப்படும் முக்கியமான துறைகள் | ஆகக்கூடிய புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்காக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் ஆகக் குறைந்தளவு புள்ளிகள் |
|---|---|---|
| மேலதிக கல்வித்தகைமைகள் | 20 | 40% |
| மேலதிக அனுபவம் | 40 | |
| மேலதிக தொழிற்தகைமைகள் | 20 | |
| மொழித்திறன் | 15 | |
| நேர்முகப் பரீட்சையின் போதான திறன் | 05 | |
| மொத்தம் | 100 | |

**குறிப்பு**.- கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதால் நியமனம் பெறுவதற்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்பட மாட்டாது.

7. **பரீட்சைக்கான நிபந்தனைகள் :**

(i) சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் ஆகிய மொழிகளுள் பரீட்சார்த்தி விரும்பிய மொழிமூலம் தொழிற்திறன் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சார்த்தியின் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் மாற்றப்படுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ii) விண்ணப்பப்படிவம் 22-29 செ.மீ. அளவிலான A4 கடதாசியின் இரு பக்கங்களையும் பாவித்து தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் 1 தொடக்கம் 9 வரை முதலாம் பக்கத்திலும், 10 தொடக்கம் 12 வரை இரண்டாம் பக்கத்திலும் எஞ்சிய பகுதியை மூன்றாம் பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பத்தை தனது சொந்த கையெழுத்தில் தயாரிக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும் சரியான முறையில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றைத் தன்னிடம் வைத்திருப்பது விண்ணப்பதாரிக்கு பயனுடையதாகும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாகவுள்ளதாவென விண்ணப்பதாரியினால் கவனிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படுமென மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(iii) அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகளுக்கு மட்டும் அனுமதி அட்டை விநியோகிக்கப்படுவதுடன் அனுமதி அட்டை இல்லாது பரீட்சை மண்டபத்துக்குள் பிரவேசிக்க அனுமதியளிக்கப்பட மாட்டாது. தொழிற்திறன் பரீட்சை ஆரம்பிக்கப்படும் தினத்தில் தனது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையும் ஆள் அடையாள அட்டையும் மட்டும் பரீட்சை மண்டப தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். பரீட்சார்த்திக்கு அனுமதி அட்டை விநியோகிக்கப்படுவதன் மூலம் அவர் ஆட்சேர்ப்பு தொடர்பில் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக கருதப்படலாகாது.

(iv) தொழில்சார் பரீட்சையை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம் அப்பரீட்சையை நடத்தும் அதிகாரிக்கே உள்ளது.

(v) தொழில்சார் பரீட்சையை நடத்துவது தொடர்பில் நியமனம் வழங்கும் அதிகாரியினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுதல் வேண்டும். குறிப்பிட்ட சட்ட ஒழுங்குவிதிகளை மீறுவதால் நியமனம் வழங்கும் அதிகாரியினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக வேண்டிய நிலை அவருக்கு ஏற்படும்.

(vi) *பரீட்சாத்தியின் அடையாளம்.-* ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தொழில்சார் பரீட்சையின் போது பரீட்சை மண்டபத் தலைவர் திருப்தியடையும் வகையில் தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்று மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) சாரதி அனுமதிப்பத்திரம்.

(vii) ***கவனத்திற்கு:***

(அ) கோரப்படும்போது ஆவணங்களை முன்வைப்பதற்குத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பப்படிவங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

(ஆ) அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பப்படிவத்தில் தனது கையொப்பத்தை கட்டாயமாக அத்தாட்சிப்படுத்திக்கொள்ள வேண்டும். தற்போது அரச சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்கள், திணைக்கள/ நிறுவன தலைவர்களின் ஊடாக தங்கள் விண்ணப்பப்படிவத்தை அனுப்ப வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகளின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படையைச் சேர்ந்த பதவிசார் உத்தியோகத்தர் அல்லது ரூபா 27,871 அல்லது அதற்கு மேலான மாதாந்த இணைந்த சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளும் அரசாங்கத்தின் நிரந்தர சேவையில் இருக்கும் உத்தியோகத்தரால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

(viii) ***பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை.-*** ஒரு பரீட்சார்த்தி தகைமைகள் அற்றவரென தெரியவந்தால் தொழில்சார் பரீட்சைக்கு முன்னர் அல்லது தொழில்சார் பரீட்சை நடைபெறும் காலத்தில் அல்லது தொழில்சார் பரீட்சைக்குப் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பரீட்சார்த்தியின் பரீட்சார்த்த நிலை இரத்துச் செய்யப்படும். பரீட்சார்த்தி ஏதேனும் விடயம் பொய்யானதெனத் தெரிந்தும் அதனை முன்வைத்துள்ளதாக தெரியவந்தால் அல்லது ஏதேனும் முக்கியமான விடயத்தை அவர் தேவையென்றே மறைத்திருந்தால் அவர் பதவி நீக்கம் செய்யப்பட முடியும்.

8. அரசசேவைகள் ஆணைக்குழுவின் நடபடிமுறைகள், காலத்துக்குக்காலம் அரச சேவை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் மற்றும் ஆரம்ப அரை தொழில்நுட்ப சேவைத் தரத்தைச் சேர்ந்த சேவை யாப்பின் மற்றும் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களின் நிபந்தனைகள் இப்பதவி தொடர்பில் ஏற்புடையதாகும்.

9. இந்த ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் அரச சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

10. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாகத் தீர்மானிக்கும் அதிகாரம் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களப் பணிப்பாளருக்கு மாத்திரமே உண்டு. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்ட இவ்வறிவித்தலில் ஏதாவது முன்பின் முரணாக இருப்பின், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழிமூல அறிவித்தலே வலுவாக்கம் பெறும்.

எஸ். என். அகுரந்திலக,
அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளர்.

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்.
2017, நவெம்பர் 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் ஆரம்ப தொழில்நுட்ப சேவைகள் தரத்தின் தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2017**

The Recruitment to the Posts of the Technician of Department of Measurement Units, Standards and Services - 2017

அலுவலக தேவைக்காக ☐

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் (சிங்களம்-02, தமிழ்-03, ஆங்கிலம்-04) ☐

(சரியான இலக்கத்தை அடைப்புக்குள் இடுக)

1. முதலெழுத்துக்கள் பின்னால் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   உதாரணம்- BANDARA, A.B.
2. முதல் எழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
3. முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
4. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.) : ----.
5. பால் : ஆண்/ பெண் (ஆண்-0, பெண்-1) ☐
   (சரியான இலக்கத்தை அடைப்புக்குள் இடுக)
6. திருமணமானவர்/ திருமணமாகாதவர் (திருமணமானவர் -1, திருமணமாகாதவர் -2) ☐
   (சரியான இலக்கத்தை அடைப்புக்குள் இடுக)
7. இனம் (சிங்களவர்-1, தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்-4, வேறு-5) ☐
   (சரியான இலக்கத்தை அடைப்புக்குள் இடுக)
8. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
9. (அ) பிறந்ததிகதி :
   ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐
   (ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் ஆகும்போது வயது (2018.01.15) :
   வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐
10. கல்வி/ தொழில் தகைமைகள் :

10.1 க.பொ.த. (சாதாரண தரம்) :

பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டு :----. பரீட்சை சுட்டெண் :----.

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

10.2 வேறு கல்வி/ தொழிற் தகைமைகள் :

| பரீட்சை | திகதி | நிறுவனம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

*10.3* பெற்றுக்கொண்டுள்ள தேசிய தொழிற்தகைமைகள் மட்டம் (NVQ மட்டம்)

| *கற்றுள்ள பாடநெறிகள்* | *நிறுவனம்* | *பெற்றுக்கொண்டுள்ள NVQ மட்டம்* | *NVQ பாடநெறி பூர்த்தி செய்யப்பட்ட திகதி (சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி)* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

கல்வித்தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

*11.* நீங்கள் அரச பதவியில் இருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளீர்களா? (அவ்வாறெனின், விபரங்களைத் தருக) அல்லது உங்களுக்கு எதிராக (அரச சேவையில் இருப்பதாயின்) திணைக்கள ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா ? :----.

*12.* நீங்கள் ஏதேனும் குற்றச்சாட்டுக்கு நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீர்களா ? :----.

*13.* விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் ஏற்றவாறு உண்மையானவை எனவும், பரீட்சைச் சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுவதற்கும் இப்பரீட்சையின் நிபந்தனைகளுக்கு அமைய நான் தகுதியற்றவராக காணப்பட்டால் பரீட்சைக்கு முன் அல்லது அது நடைபெறும்போது அல்லது அதற்குப் பின் எனது பரீட்சைக்கான உரிமையை இரத்து செய்வதற்காக மேற்கொள்ளப்படும் ஏதேனும் தீர்மானத்துக்கும் நான் இணக்கம் தெரிவிக்கின்றேன். குறிப்பிட்ட நியமனம் வழங்கப்பட்ட பின் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விபரம் தவறானது அல்லது பிழையானது என காணப்படின் எவ்வித நட்டஈடும் இன்றி பதவி நீக்கம் செய்வதற்கு உட்படுவதாகவும் ஆட்சேர்ப்பு தொடர்பான சட்ட ஒழுங்கு விதிகள் மற்றும் பெறுபேறுகள் வெளியிடல் தொடர்பான தீர்மானங்கள் தொடர்பிலும் நான் இணங்குவதாகவும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

*14.* விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

இங்கு கையொப்பமிட்டுள்ள ................................................ இல் வதியும் திரு./திருமதி/செல்வி ........................................ ................................................ என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் அறிமுகமானவர் எனவும், அவரின் கையொப்பம் ......................................... ஆந் திகதி எனது முன்னிலையில் இடப்பட்டதாகவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

..........................................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

*15.* திணைக்களத் தலைவரின் உறுதி :

(தற்போது அரச பதவியில் இருப்பவர்களுக்கு மட்டும் ஏற்புடையது)

இவ்அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் பணி புரிபவரான திரு./திருமதி/செல்வி ........................... என்பவர் தற்போது ....................................... பதவியில் பணிபுரிந்து வருவதாகவும் அவரின் வேலையும் நடத்தையும் திருப்திகரமானதெனவும் அவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டதில்லையெனவும் அவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ளும் கருத்து இல்லையெனவும் உறுதிப்படுத்துகின்றேன். அவரை குறிப்பிட்ட பதவி தொடர்பில் தெரிவு செய்தால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ முத்திரையும்.

திகதி :----.

*12-475*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சு

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

**தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சார் வகுதி - 03) சேவைத் தொகையில் செய்து காட்டுநர் (தரம் III) பதவிக்காக (திறந்த) ஆட்சேர்ப்புச் செய்தல் - 2017**

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் செய்து காட்டுநர் பதவிக்காக பின்வரும் துறைகளில் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| துறை |
|---|
| மர வேலை நிபுணத்துவம் |
| உலோக வேலை நிபுணத்துவம் |
| மோட்டார் இயந்திர நிபுணத்துவம் |
| மின்னியல் நிபுணத்துவம் |
| கட்டட நிர்மாண நிபுணத்துவம் |

1. **ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் முறை.-** அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றுக்குத் தோற்ற வேண்டியுள்ளதோடு, எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளிடையே திறமை அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெறுபவர்களில் இருந்து, நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் எழுத்துப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, திறமை அடிப்படையில், நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான தொகையினர் இணைத்துக்கொள்ளப்படுவர். இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்ட விடயப் பரப்பின்கீழ் விண்ணப்பிக்கின்ற துறைக்கு ஏற்பான அறிவைப் பரீட்சிக்கின்ற வினாத்தாள் ஒன்றிற்கும் பொது அறிவு மற்றும் மதிநுட்பத்தைப் பரீட்சிக்கின்ற வினாத்தாள் ஒன்றிற்கும் சகல விண்ணப்பதாரிகளும் தோற்ற வேண்டும். இலக்கம் 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கேற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

2. **தேவையான தகைமைகள் :**

(i) ***கல்வித் தகைமை.-*** கல்விப் பொதுத்தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் எல்லாமாக ஒரே தடவையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ii) ***தொழில் தகைமை.-*** மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் பதவிக்குப் பொருத்தமான துறையில் தேசிய தொழில் தகைமை (NVQ 5) ஆம் மட்டத்தின் பாடநெறி ஒன்றைத் தொடர்ந்து சான்றிதழ் பெற்றிருத்தல் ;

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் மர வேலைத் தேர்ச்சி/ உலோக வேலைத் தேர்ச்சி (உருக்குதல்/ ஒட்டுதல்)/ மோட்டார் இயந்திரத் தேர்ச்சி/ மின்னியல் நிபுணத்துவம்/கட்டட நிர்மாணத் தேர்ச்சி)/(நீர்க்குழாய்/மேசன்) தொடர்பாக மூன்று வருட காலம் அல்லது அதற்கு அதிகமான கால பாடநெறி ஒன்றை (முழு நேரம்/பகுதி) பூர்த்திசெய்து சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

(iii) ***அனுபவம்.-*** அரசாங்க அல்லது அரசாங்கத்தால் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றில் பதவிக்கு உரித்தான துறையில் 1 வருட காலத்திற்குக் குறையாது சேவையாற்றிய அனுபவம் பெற்றிருத்தல் ;

(iv) ***உடற் தகைமை.-*** சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றக்கூடிய வகையிலும் பதவியின் கடமைகளை நிறைவேற்றக்கூடிய வகையிலும் போதியளவான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(v) *ஏனையவை :*

* இலங்கைப் பிரசையாக இருத்தல் ;

* விண்ணப்பதாரிகள் சிறந்த குணவியல்புகளை உடையவர்களாக இருத்தல் ;

* விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்** :

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள்/ அநாதைகள், தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும் ;

(ii) நியமனமானது 3 வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டது. செய்து காட்டுநர் III ஆம் தரத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டு 3 வருட காலத்தினுள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 1/ 2014 மற்றும் அதற்கு இயைபான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப பதவியில் இணைந்து ஐந்து (5) வருட காலத்தினுள், சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழியில் குறித்த மட்டத் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டியதோடு,

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் இந்த நியமனமானது கட்டுப்பட்டுள்ளது.

4. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 18 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- இந்தப் பதவிக்கு ரூபா 29,840 - 10 x 300 - 11 x 350 - 10 x 560 - 10 x 660 - ரூபா 48,890 மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும். 2016.02.25 ஆந் திகதியிடப்பட்ட பொது நிருவாக சுற்றறிக்கை 03/2016 இற்கு அமைய சம்பளக் குறியீட்டு இலக்கம் : MT-1-2016. குறித்த சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பளம் வழங்கப்படும்.

6. **எழுத்துப் பரீட்சைக்கான விடயப் பரப்பு** :

| தொடர் இல. | வினாத் தாளின் பெயர் | விடயப் பரப்பு | நேரம் | அதிகூடிய புள்ளித் தொகை | சித்தியடைய வேண்டிய புள்ளித் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | பொது அறிவு மற்றும் மதிநுட்பத்தைப் பரீட்சித்தல் | சமகால, சமூக நிகழ்வுகள் தொடர்பான புரிதல், சர்வதேச நிகழ்வுகள் தொடர்பான அறிவு மற்றும் புத்தாக்கச் சிந்தனைத் திறன், பகுப்பாய்வு செய்வதற்கான திறமை என்பவற்றைப் பரீட்சிப்பதற்கான சுருக்க வினாத்தாள். | 1 மணித்தியாலம் | 100% | 40% |
| 2 | மர வேலை நிபுணத்துவம் | மர வேலை (கோட்பாடு), மர வேலை பொறிமுறைத் தேர்ச்சி, தொழில்நுட்ப வரைவு, தொடர்பாடல் ஆற்றல், கணிதம், பொருத்து வேலை, வீட்டுப் பொருட்கள் உற்பத்தி | 2 மணித்தியாலம் | 100% | 40% |

| தொடர் இல. | வினாத் தாளின் பெயர் | விடயப் பரப்பு | நேரம் | அதிகூடிய புள்ளித் தொகை | சித்தியடைய வேண்டிய புள்ளித் தொகை |
|---|---|---|---|---|---|
| 3 | உலோக வேலை நிபுணத்துவம் | பொறியியல் விஞ்ஞானம், தொடர்பாடல் திறன், தொழில்நுட்ப வரைவு, ஒட்டும் பொறிமுறைத் தேர்ச்சி (கோட்பாடு), உருக்கி இணைக்கும் வேலை | 2 மணித்தியாலம் | 100% | 40% |
| 4 | மோட்டார் இயந்திர நிபுணத்துவம் | பொறியியல் வரைவு மற்றும் ஆக்கத் திறன், உற்பத்தித் தொழில்நுட்பவியல், இயந்திரப் பராமரிப்பு மற்றும் சக்தி முகாமைத்துவம், தன்னியக்க தொழில் நுட்பவியல், பெற்றோல்/டீசல் இயந்திரம், மோட்டார் வாகன மின் தொழில்நுட்பம் | 2 மணித்தியாலம் | 100% | 40% |
| 5 | மின்னியல் நிபுணத்துவம் | மின்சார இயந்திரங்கள், மின் வலு மற்றும் தன்னியக்க கட்டுப்பாட்டுத் தொகுதி, நுண்ணியல்சார் செயலாக்கத் தொகுதி, பிரயோக மின் அளவீடு, மின் கம்பியிழுத்தல் | 2 மணித்தியாலம் | 100% | 40% |
| 6 | கட்டட நிர்மாண நிபுணத்துவம் | கட்டட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, கட்டுமான அளவீடு, நீர் சுத்திகரிப்பு மற்றும் கழிவு நீர் அகற்றல், கட்ட மைக்கப்பட்ட கோட்பாடு மற்றும் திட்டங்கள், அளவீட்டுக் கணக்கெடுப்பு | 2 மணித்தியாலம் | 100% | 40% |

7. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படும் துறைகள் :**

| புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | அதிகூடிய புள்ளித் தொகை |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| 2. மேலதிக தொழில் தகைமைகள் | 20 |
| 3. மேலதிக அனுபவம் | 30 |
| 4. மொழித் தேர்ச்சி | 10 |
| 5. கணினி அறிவு | 10 |
| 6. நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகள் | 05 |
| மொத்தம் | 100 |

8. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளங்கள்.**- சகல வகையிலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் மற்றும் முறையாக உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகள் என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

9. **விண்ணப்பப்பத்திரங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள் :**

(i) இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி, இலக்கம் 1 தொடக்கம் 7 வரை முதலாம் பக்கத்திலும் இலக்கம் 8 முதல் 10 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த பக்கங்களிலும் வருமாறு தயாரித்து தமது கையெழுத்தினால் முறையாகப் பூர்த்திசெய்து, "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், த. பெ. 557,

ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு 2018.01.15 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "செய்துகாட்டுநர் பதவிக்கான விண்ணப்பம்" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ii) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள், பூரணமில்லாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும்போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும்.

(iii) பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

(iv) பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆக இருப்பதோடு, அந்தக் கட்டணங்கள் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் மக்கள் வங்கியின் மத்திய நகரக் கிளை இலக்கமான 176-100-139026228 எனும் கணக்கிலக்கத்திற்கு, நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு மக்கள் வங்கியின் கிளையில் பணத்தைச் செலுத்தி, செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்திற்குரிய பகுதியில் கழன்றுவிடாதவாறு ஒட்டுதல் வேண்டும். உங்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றையும், பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றையும் உங்களுடன் வைத்துக்கொள்வது உகந்ததாகும். எந்தவொரு காரணத்துக்காகவும் பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்பட மாட்டாது என்பதோடு, காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(v) விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது, அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படை அதிகாரி ஒருவர் அல்லது 41,580 ரூபாவை (அ. நி. சு. 03/2016 - I ஆம் அட்டவணைக்கு ஏற்ப) திரட்டிய மாதாந்த சம்பளமாகப் பெறும் அரசாங்கத்தில் நிரந்தரப் பதவி வகிக்கும் அதிகாரி ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை, தாம் சேவையாற்றும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவரூடாக அனுப்புதல் வேண்டும்.

(vii) திணைக்களத்திலுள்ள எந்தவொரு நபரின் பெயரிற்கும் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படக் கூடாது என்பதோடு, அவ்வாறு அனுப்பப்படும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏதேனும் விண்ணப்பங்கள் தபாலில் அனுப்பப்பட்டதன் பின்னர் காணாமல் போதல் அல்லது தாமதமாகக் கிடைத்தல் போன்ற முறைப்பாடுகள் எதுவும் கவனத்தில எடுக்கப்பட மாட்டாது. அதே வேளை, விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றியும் அறியத்தரப்பட மாட்டாது.

10. **பரீட்சை ஒழுங்குவிதிகள்** :

(i) உரிய முறையில் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்ட பரீட்சை மத்திய நிலையத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ii) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளுக்காகவோ அல்லது இதர செலவுகளுக்காகவோ வேறெந்தக் கொடுப்பனவும் வழங்கப்பட மாட்டாது.

(iii) தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரர், தமது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் பொருட்டு-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

அல்லது

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு என்பவை மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(iv) பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழி மூலங்களில் மாத்திரமே நடைபெறும். விண்ணப்பிக்கப்படும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(v) விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமையுடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்முடிவொன்றுக்கு அமைய குறித்த கட்டணத்தைச் செலுத்தி உரிய திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்த சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதானது, தகைமைகளைக் கொண்டிருத்தல் என்பதை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்பட மாட்டாது.

(vi) பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சை அபேட்சகர்கள் கட்டுப்பட்டுள்ளனர்.

(vii) இப்பரீட்சையானது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

11. **போலியான தகவல்கள் வழங்கல்.**- உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல்கள் போலியானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரியின் அபேட்சகத் தன்மை நிராகரிக்கப்படும். அவ்வாறான போலியான அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்குரிய ஏற்பாடுகளுக்கு ஏற்ப சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்கான அல்லது பூரணப்படுத்தாமல் இருப்பதற்கான உரிமை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உள்ளது.

13. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

பீ. என். கே. மலலசேகர,
பணிப்பாளர் நாயகம்.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்,
த. பெ. இல. 557,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
2017, திசெம்பர் 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சார் வகுதி - 03) சேவைத் தொகையில் செய்துகாட்டுநர் (தரம் - III) பதவிக்காக (திறந்த) ஆட்சேர்ப்பு செய்தல்**

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் துறை | |
| விண்ணப்பிக்கும் மொழிமூலம் | |

1. விண்ணப்பதாரியின் பெயர் :

(i) முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.

(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :

(i) அலுவலக முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.

(ii) தனிப்பட்ட முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.
செல்லிடத் தொலைபேசி இலக்கம் :----.
(முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறியத்தரல் வேண்டும்.)

3. பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

6. பால் (ஆண்/பெண்) :----.

7. குடியியல் நிலைமை :
திருமணமானவர்/திருமணமாகாதவர்/விதவை போன்றன :----.

8. கல்வித் தகைமை :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சை
வருடம் :----. பரீட்சை சுட்டெண் :----.

| விடயம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை
வருடம் :----. பரீட்சை சுட்டெண் :----.

| விடயம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

9. தொழில் தகைமைகள் :

| பாடநெறி | ஆண்டு | தோற்றிய பாடங்கள் | பெறுபேறு | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. சேவை அனுபவம் தொடர்பான விபரம் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவையாற்றிய காலப்பகுதி | அரச துறை/இடைநிலை அரச துறை/ தனியார் துறை போன்றன |
|---|---|---|---|
| | | | |

11. கணினித் திறமை தொடர்பாக பெற்றுள்ள தேர்ச்சிகள் :
டிப்ளோமா :----.
சான்றிதழ் பாடநெறி :----.

12. மொழி தொடர்பில் பெற்றுள்ள தேர்ச்சி :
ஆங்கில மொழி டிப்ளோமா பாடநெறி :----.
ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி :----.

13. நீர் இலங்கைப் பிரசையாக இருப்பது பிறப்பினாலா ?/பதிவு செய்ததன் மூலமா ? என்பதைக் குறிப்பிடவும் :----.
பதிவு செய்ததன் மூலம் எனில் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும் :----.

14. நீர் அரசாங்கப் பதவி ஒன்றிலிருந்து நீக்கப்பட்டவரா ? :----.

15. தற்போது அரச சேவையில் உள்ளீர் எனில் உமக்கு எதிராக திணைக்களம் ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளதா ? :-----.

16. நீர் ஏதேனுமொரு குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறு இருப்பின் விபரத்தைக் குறிப்பிடவும் :----.

17. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கிக் கிளை :----.
பணம் செலுத்திய திகதி :----.

பற்றுச்சீட்டு கழன்றுவிடாதவாறு இணைக்கப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல் ஏதேனும் போலியானது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து, எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாக தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்குக் கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

18. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ....................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் ....................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

(இந்தப் பகுதி அரசாங்கத் தொழிலில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் சேவையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ...................... ..................... அவர்கள், .......................................... எனும் பதவியில் பணியாற்றுபவர் எனவும் இவரது பணி மற்றும் நடத்தைகள் திருப்திகரமானவை எனவும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் இல்லை எனவும், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எண்ணங்கள் இல்லை எனவும், இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரின்
கையொப்பம்.

திகதி :----.
பதவி முத்திரை :

12-445/1

---

**திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சு**

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சார்) வகுதி - 03 சேவைத் தொகையில் செய்து காட்டுநர் (தரம் III) பதவிக்காக (மட்டுப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்புச் செய்தல் - 2017**

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் செய்து காட்டுநர் பதவிக்காக பின்வரும் துறைகளில் உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்த தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்பத் தேர்ச்சி பெற்ற சேவைத் தொகைக்கு (PL-3-2016) ஏற்புடைய பதவிகளிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| துறை |
|---|
| உலோக வேலை நிபுணத்துவம் |
| மின்னியல் நிபுணத்துவம் |
| கட்டட நிர்மாண நிபுணத்துவம் |

1. **ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் முறை.**- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றுக்குத் தோற்ற வேண்டியுள்ளதோடு, எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளிடையே திறமை அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெறுபவர்களில் இருந்து, நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் எழுத்துப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, திறமை அடிப்படையில், நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான தொகையினர் இணைத்துக்கொள்ளப்படுவர். இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்ட விடயப் பரப்பின்கீழ் விண்ணப்பிக்கின்ற துறைக்கு ஏற்பான அறிவைப் பரீட்சிக்கின்ற வினாத்தாள் ஒன்றிற்கும் பொது அறிவு மற்றும் மதிநுட்பத்தைப் பரீட்சிக்கின்ற வினாத்தாள் ஒன்றிற்கும் சகல விண்ணப்பதாரிகளும் தோற்ற வேண்டும். இலக்கம் 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கேற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

2. **தேவையான தகைமைகள் :**

(i) ***கல்வித் தகைமை.***- கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் எல்லாமாக ஒரே தடவையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ii) ***தொழில் தகைமை.***- மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் பதவிக்குப் பொருத்தமான துறையில் தேசிய தொழில் தகைமை (NVQ 4) ஆம் மட்டத்தின் பாடநெறி ஒன்றைத் தொடர்ந்து சான்றிதழ் பெற்றிருத்தல் ;

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் உலோக வேலைத் தேர்ச்சி (உருக்குதல்/ஒட்டுதல்) மோட்டார் இயந்திரத் தேர்ச்சி/ கட்டட நிர்மாணத் தேர்ச்சி (மேசன்/நீர்க்குழாய்) தொடர்பாக ஒரு வருட காலம் அல்லது அதற்கு அதிகமான கால பாடநெறி (முழு நேரம்/ பகுதி நேரம்) ஒன்றைப் பூர்த்திசெய்து சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

(iii) ***அனுபவம்.***- தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்பத் தேர்ச்சி பெற்ற சேவைத் தொகைக்கு உரித்தான (PL-3-2016) பதவி ஒன்றில் நிரந்தர நியமனம் பெற்று 7 வருட கால செயற்படு நிலையிலான திருப்திகரமான சேவைக்காலத்தை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;

(iv) ***உடல் தகைமை.***- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றக்கூடிய வகையிலும் பதவியின் கடமைகளை நிறைவேற்றக்கூடிய வகையிலும் போதியளவான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(v) ***வேறு.***- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது ; ஓய்வூதிய உரித்துடையது. தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள்/ அநாதைகள், தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும் ;

(ii) நியமனமானது 1 வருட வேலை பார்த்தல் காலத்திற்கு உட்பட்டது. செய்துகாட்டுநர் III ஆம் தரத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டு 3 வருட காலத்தினுள் ஆட்சேர்ப்புத் திட்ட விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 1/2014 மற்றும் அதற்கு இயைபான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப தற்போது வகிக்கின்ற பதவியில் உரிய தேர்ச்சியைப் பெற்றிருந்தாலும் இந்தப் பதவிக்கு உரித்தான ஏனைய அரச கரும மொழி தொடர்பாக குறித்த தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் இந்த நியமனமானது கட்டுப்பட்டுள்ளது.

4. **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 25 வயதுக்குக் குறையாமல் இருப்பதோடு, உச்ச வயதெல்லை கிடையாது.

5. **சம்பள அளவுத்திட்டம்.**- இந்தப் பதவிக்கு ரூபா 29,840 - 10 x 300 - 11 x 350 - 10 x 560 - 10 x 660 - ரூபா 48,890 மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும். 2016.02.25 ஆந் திகதியிடப்பட்ட பொது நிருவாக சுற்றறிக்கை இல. 03/2016 இற்கு அமைய சம்பளக் குறியீட்டு இலக்கம் : MT-1-2016. குறித்த சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பளம் வழங்கப்படும்.

6. **எழுத்துப் பரீட்சைக்கான விடயப் பரப்பு** :

| தொடர் இல. | வினாத் தாளின் பெயர் | விடயப் பரப்பு | நேரம் | அதிகூடிய புள்ளித் தொகை | சித்தியடைய வேண்டிய புள்ளித் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | பொது அறிவு மற்றும் மதிநுட்பத்தைப் பரீட்சித்தல் | சமகால, சமூக நிகழ்வுகள் தொடர்பான புரிதல், சர்வதேச நிகழ்வுகள் தொடர்பான அறிவு மற்றும் புத்தாக்கச் சிந்தனைத் திறன், பகுப்பாய்வு செய்வதற்கான திறமை என்பவற்றைப் பரீட்சிப்பதற்கான சுருக்க வினாத்தாள். | 1 மணித்தியாலம் | 100% | 40% |
| 2 | மர வேலை நிபுணத்துவம் | மர வேலை (கோட்பாடு), மர வேலை பொறிமுறைத் தேர்ச்சி, தொழில்நுட்ப வரைவு, தொடர்பாடல் ஆற்றல், கணிதம், பொருத்து வேலை, வீட்டுப் பொருட்கள் உற்பத்தி | 2 மணித்தியாலம் | 100% | 40% |
| 3 | உலோக வேலை நிபுணத்துவம் | பொறியியல் விஞ்ஞானம், தொடர்பாடல் திறன், தொழில்நுட்ப வரைவு, ஒட்டும் பொறிமுறைத் தேர்ச்சி (கோட்பாடு), உருக்கி இணைக்கும் வேலை | 2 மணித்தியாலம் | 100% | 40% |
| 4 | கட்டட நிர்மாண நிபுணத்துவம் | கட்டட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, கட்டுமான அளவீடு, நீர் சுத்திகரிப்பு மற்றும் கழிவு நீர் அகற்றல், கட்டமைக் கப்பட்ட கோட்பாடு மற்றும் திட்டங்கள், அளவை அளவையியல் | 2 மணித்தியாலம் | 100% | 40% |
| 5 | மின்னியல் நிபுணத்துவம் | மின்சார இயந்திரங்கள், மின் வலு மற்றும் தன்னியக்க கட்டுப்பாட்டுத் தொகுதி, நுண்ணியல்சார் செயலாக்கத் தொகுதி, பிரயோக மின் அளவீடு, மின் கம்பியிழுத்தல் | 2 மணித்தியாலம் | 100% | 40% |

7. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படும் துறைகள்** :

| புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | அதிகூடிய புள்ளித் தொகை |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| 2. மேலதிக தொழிற் தகைமைகள் | 20 |
| 3. மேலதிக அனுபவம் | 30 |
| 4. மொழித் தேர்ச்சி | 10 |
| 5. கணினி அறிவு | 10 |
| 6. நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகள் | 05 |
| மொத்தம் | 100 |

8. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளங்கள்**.- சகல வகையிலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் மற்றும் முறையாக உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகள் என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

*9. **விண்ணப்பப்பத்திரங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள்** :*

(i) *இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி, இலக்கம் 1 தொடக்கம் 7 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 8 முதல் 10 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த பக்கங்களிலும் வருமாறு தயாரித்து தமது கையெழுத்தினால் முறையாகப் பூர்த்திசெய்து, "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், த. பெ. 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு 2018.01.29 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "செய்துகாட்டுநர் பதவிக்கான விண்ணப்பம்" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் ;*

(ii) *மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள், பூரணமில்லாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும்போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும்.*

(iii) *பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.*

(iv) *பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆக இருப்பதோடு, அந்தக் கட்டணங்கள் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் மக்கள் வங்கியின் மத்திய நகரக் கிளை இலக்கமான 176-100-139026228 எனும் கணக்கிலக்கத்திற்கு, நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு மக்கள் வங்கியின் கிளையில் பணத்தைச் செலுத்தி, செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய பகுதியில் கழன்றுவிடாதவாறு ஒட்டுதல் வேண்டும். உங்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றையும், பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றையும் உங்களுடன் வைத்துக்கொள்வது உகந்ததாகும். எந்தவொரு காரணத்துக்காகவும் பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்பட மாட்டாது என்பதோடு, காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

(v) *விண்ணப்பப்படிவங்களை, தாம் சேவையாற்றும் நிறுவனத்தின் தலைவர் ஊடாக அனுப்பப்படுதல் வேண்டும்.*

(vi) *திணைக்களத்திலுள்ள எந்தவொரு நபரின் பெயரிற்கும் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படக் கூடாது என்பதோடு, அவ்வாறு அனுப்பப்படும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏதேனும் விண்ணப்பங்கள் தபாலில் அனுப்பப்பட்டதன் பின்னர் காணாமல் போதல் அல்லது தாமதமாகக் கிடைத்தல் போன்ற முறைப்பாடுகள் எதுவும் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது. அதே வேளை, விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றியும் அறியத்தரப்பட மாட்டாது.*

*10. **பரீட்சை ஒழுங்குவிதிகள்** :*

(i) *உரிய முறையில் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்ட பரீட்சை மத்திய நிலையத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.*

(ii) *இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளுக்காகவோ அல்லது இதர செலவுகளுக்காகவோ வேறெந்தக் கொடுப்பனவும் வழங்கப்பட மாட்டாது.*

(iii) *தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரர், தமது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் பொருட்டு-*

*(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;*
*(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு*
*என்பவை மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.*

(iv) பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிமூலங்களில் மாத்திரமே நடைபெறும். விண்ணப்பிக்கப்படும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(v) விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமையுடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற எடுகோளிற்கு அமைய குறித்த கட்டணத்தைச் செலுத்தி உரிய திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்த சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதானது, தகைமைகளைக் கொண்டிருத்தல் என்பதை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்பட மாட்டாது.

(vi) பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டுள்ளனர்.

(vii) இப்பரீட்சையானது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் கொழும்பில் பரீட்சை மத்திய நிலையங்களில் நடாத்தப்படும்.

11. **போலியான தகவல்கள் வழங்கல்.**- உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப்படிங்களில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல்கள் போலியானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரியின் அபேட்சகத் தன்மை நிராகரிக்கப்படும். அவ்வாறான போலியான அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்குரிய ஏற்பாடுகளுக்கு ஏற்ப சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்கான அல்லது பூரணப்படுத்தாமல் இருப்பதற்கான உரிமை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உள்ளது.

13. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

பீ. என். கே. மலலசேகர,
பணிப்பாளர் நாயகம்.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்,
த. பெ. இல. 557,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
2017, திசெம்பர் 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சார் வகுதி - 03) சேவைத் தொகையில் செய்துகாட்டுநர் (தரம் III) பதவிக்காக (மட்டுப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்பு செய்தல் - 2017**

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் துறை | |
| விண்ணப்பிக்கும் மொழிமூலம் | |

1. விண்ணப்பதாரியின் பெயர் :

(i) முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.
(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. தற்போது வகிக்கின்ற பதவி :

(i) குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :

ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

(ii) விண்ணப்ப முடிவுத் திகதியன்று குறித்த பதவியில் சேவைக்காலம் :

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

3. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :

(i) அலுவலக முகவரி :----.
(ii) தொலைபேசி இலக்கம் :----.
(iii) தனிப்பட்ட முகவரி :----.
(iv) தொலைபேசி இலக்கம் :----.
(v) செல்லிடத் தொலைபேசி இலக்கம் :----.
(முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறியத்தரல் வேண்டும்.)

4. பிறந்த திகதி :

ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

5. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

7. பால் (ஆண்/பெண்) :----.

8. குடியியல் நிலைமை :
திருமணமானவர்/திருமணமாகாதவர்/விதவை போன்றன :----.

9. கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சை
ஆண்டு :----. பரீட்சை சுட்டெண் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை
ஆண்டு :----. பரீட்சை சுட்டெண் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

10. தொழில் தகைமைகள் :

| பாடநெறி | ஆண்டு | தோற்றிய பாடங்கள் | பெறுபேறு | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

11. சேவை அனுபவம் தொடர்பான விபரம் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவையாற்றிய காலப்பகுதி | அரச துறை/இடைநிலை அரச துறை/ தனியார் துறை போன்றன |
|---|---|---|---|
| | | | |

12. கணினித் திறமை தொடர்பாக பெற்றுள்ள தேர்ச்சிகள் :
டிப்ளோமா :----.
சான்றிதழ் பாடநெறி :----.

13. ஆங்கில மொழி தொடர்பில் பெற்றுள்ள தேர்ச்சி :
ஆங்கில மொழி டிப்ளோமா பாடநெறி :----.
ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி :----.

14. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கிக் கிளை :----.
பணம் செலுத்திய திகதி :----.

பற்றுச்சீட்டு கழன்றுவிடாதவாறு இணைக்கப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல் ஏதேனும் போலியானது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து, எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாக தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்குக் கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் ........................................... தொழில்நுட்பவியல்/ தொழில்நுட்பக் கல்லூரியில் சேவையாற்றும் திரு./திருமதி/செல்வி .......................................... அவர்கள், .................... ................... எனும் பதவியில் பணியாற்றுபவர் எனவும் இவரது பணி மற்றும் நடத்தைகள் திருப்திகரமானவை எனவும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் இல்லை எனவும், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எண்ணங்கள் இல்லை எனவும், இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.
பதவி முத்திரை :----.

12-445/2

---

திருத்தம்

## அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் அதிசிறப்புத் தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017

2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதிய 2039 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் அதிசிறப்புத் தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017" பரீட்சை அறிவிப்பில் 4 ஆவது பந்தியில் முதலாவது பிரிவு, பந்தி 6 மற்றும் 7 (ஆ) பந்தியில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

(i) பந்தி 4 இல் முதலாவது பிரிவு மட்டும் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

2017.12.31 ஆந் திகதிய அதிசிறப்பு தரத்தின் வெற்றிடங்களில் 50% அளவினை உரித்துடைய நியமனங்கள் மேற்கொள்ளப்படுவது, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாக என்பதுடன், அதன் பிரகாரம் இந்தப் பரீட்சையில் நிரப்பப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 143 ஆகும்.

(ii) பந்தி 6 இற்கு பின்வருமாறு குறிப்புகள் உள்ளடக்கப்படுகின்றன :

(i) **குறிப்பு** :

அரசாங்க முகாமைத்துவ சேவையில் தற்போது பணியாற்றுகின்ற தரங்களுக்கு அமைவாக மேற்படி (அ), (ஆ), (இ) மூலம் காட்டப்பட்டுள்ள முனைப்பான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்து, தற்போது பணியாற்றுகின்ற தரத்திற்கு ஏற்புடையதாக சித்தியடையவேண்டிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை சேவைப்பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைவாக பூர்த்திசெய்யப்பட வேண்டிய ஆகக்குறைந்த அமர்வுகளில் 2017.12.31 ஆந் திகதி சித்தியடைந்திருந்தபோதிலும், நிர்வாக காரணங்களினால் சம்பந்தப்பட்ட வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் சலுகை கிடைக்கப்பெறுதலில் தாமதமேற்பட்டு, சேவையில் நிரந்தரப்படுத்தல் அல்லது தரமுயர்வு என்பன விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் உரித்தற்றுப் போனதன் காரணமாக மட்டும் செயலூக்கம்மிக்க சேவைக்காலம் பூர்த்திசெய்வதற்கு முடியாதுபோன அலுவலர்களும் இப்பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கலாம்.

(ii) **குறிப்பு** :

எவ்வாறாயினும், அந்த அலுவலர்கள் விண்ணப்பம் செய்வதற்கும், பரீட்சையில் தோற்றுவதற்கும் வாய்ப்பு வழங்குதலானது, தரமுயர்வு பெறுவதற்கு தகைமையாகாது என்பதுடன், அதிசிறப்புத் தரத்திற்கு தரமுயர்த்தும் கடிதம் வழங்கப்படுவதற்கென்றால், உரியவாறு அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ளதாக திருப்தியடைந்து சம்பந்தப்பட்ட நிரந்தரப்படுத்தல்/தரமுயர்த்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) 7(ஆ) ஆம் பந்தியில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2017.12.31 வரை நீடிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் விண்ணப்பதாரிகள் 2017.12.31 ஆந் திகதியில் எல்லாத் தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(iv) இந்தப் பரீட்சையின் பொருட்டு தற்போது விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பங்கள் அனுப்புவதை தவிர்க்கும்படி அறியத்தருகின்றேன்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2017, நவெம்பர் 30.

12-477

---

## விவசாயத் திணைக்களம்

### விவசாயத் திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படும் விவசாய உற்பத்தித் தொழில்நுட்பத்தில் ஒன்றரை (1 1/ 2) வருட டிப்ளோமா பாடநெறியில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2018/ 2019

2018/ 2019 கல்வி ஆண்டுக்கான விவசாய உற்பத்தித் தொழில்நுட்பத்தில் ஒன்றரை (1 1/ 2) வருட தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 05 (NVQ Level - 5) பாடநெறிக்கு சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை விவசாயத் திணைக்களத்தின் பரீட்சைகள் பிரிவின் மூலம் 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதத்தில் தெரிவுசெய்யப்பட்ட பிரதான நகரங்கள் சிலவற்றில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும்.

2. மேற்படி டிப்ளோமா பாடநெறியானது விவசாயத் திணைக்களத்தின்கீழ் இயங்கும் விவசாயக் கல்லூரிகளில் நடாத்தப்படும் :

2.1 விவசாய உற்பத்தித் தொழில்நுட்பத்தில் ஒன்றரை (1 1/ 2) வருட இப்பயிற்சிநெறியானது ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவானது. நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையில் அதிகூடுதலான புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் விவசாயக் கல்லூரிகளில் காணப்படும் வசதிகளுக்கு அமைய போதுமான எண்ணிக்கையில் தெரிவுசெய்யப்படுவர்.

2.2 பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் தகைமையைப் பரிசோதிப்பதற்காக மாத்திரம் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதோடு, அதற்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

2.3 இப்பயிற்சி நெறியானது ஆங்கில மொழியில் மாத்திரம் நடாத்தப்படும்.

2.4 இப்பயிற்சி நெறி தங்குமிட வசதியுடன் கூடிய முழுநேரப் பயிற்சி நெறியாகும். அனைத்து பயிலுநர்களும் பயிற்சிக் காலத்தின்போது கட்டாயமாக விடுதியில் தங்கி பயிற்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

2.5 பயிற்சி நிறுவனத்தின் ஒரு வருட பயிற்சியின் பின்னர், தேசிய பயிலுநர் தொழில்நுட்பப் பயிற்சி அதிகாரசபையின் மேற்பார்வையின்கீழ், பெயர் குறிப்பிடப்படும் நிறுவனத்தில் ஆறு (06) மாத காலத்திற்குத் தொழிற்பயிற்சியை கட்டாயமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

2.6 மேற்குறிப்பிடப்பட்ட பயிற்சி நெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த பின்னர் மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் மூலம் பயிலுநர்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 05 (NVQ Level - 05) மட்டத்திலான சான்றிதழ் வழங்கப்படும்.

2.7 இச்சான்றிதழ் விவசாயத் திணைக்களம் உட்பட ஏனைய விவசாயம் தொடர்புடைய அரச நிறுவனங்களில் தொழில்நுட்ப உதவியாளர் மட்டத்திலான தொழில் வாய்ப்புகளுக்கான தகைமையாகக் கருதப்படும்.

3. **பாடநெறிக்கு அனுமதி பெறுவதற்கான தகைமைகள் :**

3.1 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்கள் உள்ளடங்கலாக 4 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பதுடன் மொத்தமாக ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். (இதன்போது ஒரு தடவையில் ஐந்து (5) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்) ;

அத்துடன்

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல், விவசாயம் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்றிலாவது சித்தியடைந்திருக்க வேண்டும். (உயர் தரத்தில் கணிதப் பிரிவைப் பயின்ற மாணவர்கள் இரசாயனவியல் அல்லது பௌதீகவியலில் சித்தியடைந்திருப்பது தெரிவுசெய்யப்படுவதற்கான ஒரு தகைமையாகக் கருதப்பட மாட்டாது.) ;

அல்லது

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தொழில்நுட்பவியல் பாடத்துறையில் உயிர் தொழில்நுட்பவியல் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம், விவசாயம் ஆகிய மூன்று பாடங்களைப் பயின்று அதில் ஒரு பாடத்திலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அல்லது

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தொழில்நுட்பவியல் பாடத்துறையில் பொறியியல் தொழில்நுட்பவியல் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம், விவசாயம் ஆகிய மூன்று பாடங்களைப் பயின்று அதில் ஒரு பாடத்திலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் தினத்தன்று விண்ணப்பதாரிகளின் வயது 17 வயதிற்குக் குறைவாகவோ அல்லது 25 வயதிற்கு மேற்பட்டோ இருத்தல் கூடாது.

3.2 மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் விவசாயத் துறையுடன் தொடர்புடைய பின்வரும் தேசிய தொழில் சார்பு தகைமை மட்டம் (NVQ Level-4) பாடநெறியைப் பயின்று மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 4 இல் (NVQ - 4) சான்றிதழைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளும் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

* நாற்றுமேடை அபிவிருத்தி உதவியாளர்
* வெளிக்கள உதவியாளர் (விவசாயம்)
* தோட்ட அலங்காரக் கலைஞர்

அல்லது

விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட விவசாயத் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 4 (NVQ - 4) வேறு பாடநெறியொன்றைப் பயின்றிருத்தல்.

மேற்கூறிய தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 4 (NVQ Level - 4) பாடநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்கள் உள்ளடங்கலாக 4 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பதுடன் மொத்தமாக ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். (இதன்போது ஒரே அமர்வில் ஐந்து (5) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்).

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் தினத்தன்று விண்ணப்பதாரிகள் 17 வயதிற்குக் குறைவாகவோ 35 வயதிற்கு மேற்பட்டோ இருத்தல் கூடாது.

இவ்விதம் பயிற்சி நெறிக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையானது மொத்த விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையின் 10% சதவீதமே ஆகும்.

4. **பாடநெறிக்கு விண்ணப்பித்தல் :**

4.1 இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய, விண்ணப்பதாரியின் கையெழுத்திலோ அல்லது தட்டச்சிலோ அல்லது கணினியிலோ 8" x 12" (A4) அளவுள்ள கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தமது விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்துக்கொள்ள முடியும். (விண்ணப்பப்படிவங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழி மூல விண்ணப்பத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி மூல விண்ணப்பத்தில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதுதல் வேண்டும்.) விண்ணப்பப்படிவத்தில் இலக்கம் 1 தொடக்கம் 9 வரை முதலாம் பக்கத்திலும், 10 தொடக்கம் 13 வரை இரண்டாவது பக்கத்திலும், 14 தொடக்கம் மிகுதி 3 ஆம் பக்கத்திலும் வருமாறு தயாரிக்கப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கேற்ப அமையாத விண்ணப்பங்களும் முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலும் இல்லாது நிராகரிக்கப்படும். தாம் நிரப்பும் விண்ணப்பப்படிவத்தினை இவ்வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியைத் தம்வசம் வைத்திருக்க வேண்டும்.

4.2 பரீட்சைக் கட்டணம் 700 ரூபா ஆகும். விண்ணப்பதாரியினால் மக்கள் வங்கியில் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் கணக்கு இலக்கம் 057100179027204 ஐக் கொண்ட வங்கிக் கணக்கிற்கு ரூபா 700 செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும்.

4.3 அனைத்து விண்ணப்பங்களையும் பதிவுத்தபாலில் மாத்திரம் 2018.01.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர், விரிவாக்கற் பயிற்சி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை" என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். தபாலில் பிந்திக் கிடைக்கும் அல்லது காணாமற்போகும் விண்ணப்பங்களுக்கு விவசாயத் திணைக்களம் பொறுப்பேற்காது.

4.4 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஒன்றரை (1 1/ 2) வருட தேசிய விவசாய டிப்ளோமா பாடநெறிக்கு அனுமதி பெறல் - 2018/ 2019" எனத் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

5. **பரீட்சை நிலையங்கள்**.- 2018/ 2019 விவசாய உற்பத்தித் தொழில்நுட்ப பாடநெறிக்கு மாணவர்களை அனுமதிக்கும் போட்டிப் பரீட்சையானது விவசாயத் திணைக்களத்தின் மூலம் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் பின்வரும் நகரங்களில் அமைந்துள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும் :

| நகர இல. | நகரம் |
|---|---|
| 01 | கம்பஹா |
| 02 | அம்பாறை |
| 03 | தம்புள்ளை |
| 04 | காலி |
| 05 | அம்பாந்தோட்டை |
| 06 | குருநாகல் |
| 07 | கண்டி |
| 08 | வவுனியா |
| 09 | அநுராதபுரம் |

குறிப்பிட்டதொரு பரீட்சை நிலையத்திற்குப் போதியளவான விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து, விண்ணப்பதாரியின் இரண்டாவது தெரிவிற்கமையவோ அல்லது விண்ணப்பித்துள்ள நிலையத்திற்கு அருகில் உள்ள வேறு ஒரு பரீட்சை நிலையமோ அவர்களுக்கு வழங்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள நகரம்/ நகரங்களையோ, போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழியையோ பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

*6. **பரீட்சை முறைமை.-***

*6.1* போட்டிப் பரீட்சைக்கான பாடங்களும் நேர அட்டவணையும் கீழே தரப்பட்டுள்ளன :

*பாடங்கள் :*

முதலாம் வினாத்தாள் (01) விவசாயம் (100) காலம் : 1 மணித்தியாலம்

க. பொ. த. (சா. த.) விவசாய பாடவிதானத்திற்கு அமைவானதும் விவசாயத்துறையோடு தொடர்பான பொது விடயங்களையும் கொண்டு தயாரிக்கப்பட்ட பல்தேர்வு, சுருக்க வினாக்கள் அடங்கியது. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

இரண்டாம் வினாத்தாள் (02) விவேகப் பரீட்சை (100) காலம் : 1 மணித்தியாலம்

(ஒழுங்கமைப்பு, எதிர்வுகூறல், தொடர்பு காணல், ஒப்பிடுதல், பகுத்தறிதல் போன்ற திறன்கள் மதிப்பிடப்படும் பல்தேர்வு சுருக்கமான 50 வினாக்களைக் கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.)

*6.2* இங்கு 3.1, 3.2 ஆகிய பந்திகளில் தரப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் விவசாயத் திணைக்களத்தினால் அனுமதிப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திய அனுமதிப்பத்திரங்களை பரீட்சை நிலையத்தின் பிரதான மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதிப்பத்திரங்களை அஞ்சல் செய்தவுடன் அது தொடர்பான விளம்பரமொன்று விவசாயத் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். இவ்விளம்பரத்தினைப் பிரசுரித்து இரண்டு அல்லது மூன்று நாட்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்காதவர்கள் அனுமதிப்பத்திரத்தை அனுப்பிவைப்பதற்கான தொலைநகல் இலக்கத்தினைக் குறிப்பிட்டு, கீழே அ, ஆ, இ ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்திய நிழற்படப் பிரதிகளுடன் விவசாயத் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்து தமக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் :-

(அ) விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதி ;

(ஆ) பணம் செலுத்திய பற்றுச்சீட்டினது நிழற்படப் பிரதி ;

(இ) விண்ணப்பத்தினை அனுப்பிய பதிவுத்தபால் பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி.

*6.3* விண்ணப்பதாரிகளினால் பெறப்பட்ட புள்ளிகள் திணைக்கள இணைய வலைத்தளத்தில் வெளியிடப்படும். மேற்குறிப்பிட்ட இரண்டு பாடங்களினதும் கூட்டுத் தொகையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். விண்ணப்பதாரி ஒருவரை எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அழைத்திருப்பதன் காரணமாக அவர் தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருத முடியாது. பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தகைமையற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தித் தகைமை இரத்துச்செய்யப்படும்.

*6.4* எழுத்துப் பரீட்சைக்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அல்லது இவ்விரண்டுக்கும் தோற்றுவதற்கு அரசாங்கத்தினால் எந்தவிதமான படிகளும் செலவுகளும் வழங்கப்பட மாட்டாது.

கலாநிதி ஆர். ஆர். ஏ. ரொஹான் விஜேகோன்,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**NVQ 5 மட்டத்திலான விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான ஒன்றரை (1 1/ 2) வருட தேசிய டிப்ளோமா பாடநெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2018/ 2019**

**(Competitive Examination for Admission to National Diploma in Agricultural Production Technology One and half Year Course NVQ Level 05 – 2018/2019**

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1.

| பரீட்சைக்குத் தோற்றும் நகரம் | அந்நகரின் இலக்கம் |
|---|---|
| 1 ஆம் தெரிவு ................................ | .......................... |
| 2 ஆம் தெரிவு ................................ | .......................... |
| 3 ஆம் தெரிவு ................................ | .......................... |

(வர்த்தமானி அறிவித்தலின் முதலாவது பந்திக்கு அமைவாக)

2.

| பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : | |
|---|---|
| சிங்களம் - 2<br>தமிழ் - 3 | ☐ |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3. பால் (ஆண்/ பெண்) :

| | |
|---|---|
| ஆண் - 0 | ☐ |
| பெண் - 1 | |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

4. (அ)(i) முதல் எழுத்தைக் கடைசியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :-----.
(தெளிவான எழுத்தில்)

(ii) முதலெழுத்துக்கள் இறுதியில் குறிக்கப்பட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
----.
(உதாரணம் : ANANDA, K. C. B.)

(ஆ)(i) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (தமிழில்) :-----.

(ii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

5. (i) முழுமையான முகவரி :-----.

(ii) பரீட்சை அனுமதிப்பத்திரத்தினை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி (முழுமையான முகவரி) :----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

(iii) தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் :

(1) நிலையான தொலைபேசி : ☐☐☐☐☐☐☐☐☐☐

(2) கையடக்க தொலைபேசி : ☐☐☐☐☐☐☐☐☐☐

6. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

7. (அ) தற்போது வதியும் தேர்தற் தொகுதி (தமிழில்) :-----.

(ஆ) தற்போது வதியும் தேர்தற் தொகுதி (ஆங்கிலத்தில்) :-----.

8. பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

9. 2018.01.15 ஆந் திகதி அன்று வயது :

வருடங்கள் : [ ] மாதங்கள் : [ ] நாட்கள் : [ ]

10. கல்வித் தகைமைகள் (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விபரங்களைக் கட்டாயமாக வாசித்து இப்பாகத்தினை நிரப்பவும்) :-----.

(அ) இந்த அறிவித்தலின் 3.1 ஆம் பந்திக்கமைய க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்த ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட இலக்கம் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. தமிழ் | | |
| | | 2. கணிதம் | | |
| | | 3. விஞ்ஞானம் | | |
| | | 4. | | |
| | | 5. | | |
| | | 6. | | |
| | | 7. | | |
| | | 8. | | |
| | | 9. | | |
| | | 10. | | |
| | | 11. | | |

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட இலக்கம் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. உயிரியல் | | |
| | | 2. விவசாயம் | | |
| | | 3. பௌதீகவியல் | | |
| | | 4. இரசாயனவியல் | | |
| | | 5. உயிர் தொழில்நுட்பவியல் | | |
| | | 6. தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் | | |
| | | 7. பொறியியல் தொழில்நுட்பவியல் | | |

(இ) மேற்குறிப்பிட்ட கல்வித் தகைமைகளை உறுதிசெய்வதற்கு கல்விச் சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பவும். (மூலப்பிரதியை அனுப்பத் தேவையில்லை.)
கல்விச் சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளனவா ? :-----.

11. NVQ மட்டம் 4 ஐப் பயின்று, தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்கானது :

பயின்ற NVQ மட்டம் 4 தொடர்பான விபரங்கள் :

(அ) பாடநெறியின் பெயர் :----.

(ஆ) பயிற்சியை மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர் :----.

(இ) NVQ தகைமை பெற்ற வருடம் :----.
(சான்றிதழ்களின் நிழற்படப் பிரதியை இத்துடன் இணைக்கவும்.)

12. உயிரியல் அல்லது தொழில்நுட்பவியல் பிரிவில் கற்று தகைமையுள்ள, தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 4 இலும் (NVQ 4) தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் கீழ்வரும் பகுதி ஏற்புடையதாகும்.

நீர் (NVQ 4) தகைமைகளுடன் தேர்வுப் பரீட்சைக்குத் தோற்றுகின்றீரா அல்லது க. பொ. த. (உ. த.) பரீட்சைத் தகைமைகளுடன் தோற்றுகின்றீரா என குறிப்பிடுக. (உரிய ஒரு கூட்டில் மாத்திரம் புள்ளடியிடுக.) :

NVQ 4 பாடநெறியின் தகைமைகளுடன் ☐

உயர் தரத் தகைமைகளுடன் ☐

13. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும் முகவரியும் (தமிழில்) :-----.

14. பரீட்சைக் கட்டணம் தொடர்பான விபரங்கள் :

14.1 விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் 057100179027204 என்னும் கணக்கு இலக்கத்திற்கு மக்கள் வங்கியில் வரவிலிட்டுப் பெறப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் :-----.

14.2 பணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கிக் கிளை :-----.

| |
|---|
| பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மேல் விளிம்பை மாத்திரம் பசையால் இங்கு ஒட்டிவிடவும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை கட்டாயமாக தம்வசம் வைத்திருக்கவும். |

**விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். க. பொ. த. (சாதாரண) தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதோடு தமிழ், விஞ்ஞானம், கணிதம் என்பவற்றிற்கு திறமைச் சித்தியும் சமூகக்கல்வி அல்லது விவசாயம் அல்லது வரலாறு அல்லது வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் அல்லது விவசாய உணவுத் தொழில்நுட்பம் அல்லது பூங்கனியியல் ஆகிய ஆறு பாடங்களில் ஒன்றிற்கு திறமைச் சித்தியும் உயர்தரத்தில் உயிரியற் பிரிவில்/ தொழில்நுட்பவியல் பிரிவில் பயின்று வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட தகைமைகளை பெற்றுள்ளேன் என உறுதியளிக்கிறேன். இதிலடங்கிய விபரங்களில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படுமிடத்து நான் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு அல்லது விவசாயக் கல்லூரிக்கு தெரிவுசெய்யப்படுவதற்கான தகைமைகளை இழப்பேன் என்பதையும் அறிவேன். இப்பரீட்சைகளை நடாத்துவது தொடர்பில் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு அமைவாக நடக்க நான் சம்மதிக்கிறேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**கல்வித் தகைமைகளையும் கையொப்பத்தையும் உறுதிப்படுத்தல்**

(திணைக்களத் தலைவர் ஒருவரினால் அல்லது பாடசாலை அதிபர் ஒருவரினால் அல்லது சமாதான நீதவான் ஒருவரால் அல்லது சட்டத்தரணியால் அல்லது வருடாந்த திரட்டிய சம்பளமாக ரூபா 2,30,060 ஐ அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைப் பெறும் நிரந்தர அரசாங்க அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.)

மேலே கையொப்பமிட்ட திரு./ திருமதி/ செல்வி ............................................... என்பவரை நான் நன்கு அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். மேலும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள க. பொ. த. (சா. த.), க. பொ. த. (உ. த.) தகைமைகளை பெற்றுள்ளார் என வர்த்தமானி அறிவித்தலையும் கல்விச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளையும் பரீட்சித்து பொறுப்புடன் அத்தாட்சிப்படுத்துகிறேன். மேலும் உரிய பரீட்சை கட்டணங்களை செலுத்தியுள்ளார் என்பதையும் அதற்கான பற்றுச்சீட்டை உரிய இடத்தில் ஒட்டியுள்ளார் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

*12-521*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.